## *21*

# சிலுவையால் ஈர்க்கப்படுதல்

## 1 கொரிந்தியர் 1:18; கலாத்தியர் 6:14

*“நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்” (யோவான் 12:32).*

சிலுவை நம்மை ஏன் ஈர்ப்பதாக இருக்கிறது?

அது நமது புரிந்துகொள்ளுலை ஈர்ப்பதாக இருக்கிறது. கிறிஸ்தவமானது வரலாற்றில் ஒரு நிகழ்வில் இருந்து வந்தது. அது ஒரு கருத்தாகவோ, ஒரு தத்துவமாகவோ அல்லது ஒரு கூற்றாகவோ குறைக்கப்பட முடியாது. அது (இயேசு கிறிஸ்து என்ற) ஒரு நபராக உள்ளது. அது தேவன் கூறியதாக மாத்திரமின்றி, தேவன் செய்ததாகவும் உள்ளது.

உலகத் தர அளவையில், கிறிஸ்துவின் வாழ்வு ஒரு தோல்வியாகவே இருந்தது. ரோமாபுரியும் எருசலேமும் அதினால் மாற்றப்படாதிருந்தன. இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்றபோது, ஒப்புக்கொடுத்திருந்த 120 சீஷர்களை மாத்திரமே அவர் எருசலேமில் விட்டுச் சென்றிருந்தார் (நடபடிகள் 1:11-15). அவர்கள் அறியப்படாதவர்களாக, கையில் காசில்லாதவர்களாக மற்றும் அரசியல் அதிகாரமற்றவர்களாக இருந்தனர் (நடபடிகள் 4:13). இருப்பினும், பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பிரசங்கித்தபோது, ஏறக்குறைய மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றனர். அதைப் பற்றி நினைக்கும் எவரொருவரும், எல்லா காலத்திற்குமாக நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சி, இயேசு நமக்காக மரித்தது என்று முடிவு செய்வார். நம்மைப் படைத்த தேவன், அவரது குமாரனுடைய நபர்த்துவத்தில் நம்மைப்போல் ஒருவரானார். அவர் நம்முடன் இந்த பூமியில் நடந்து நம் பாவங்களைத் தமது தோள்களில் சிலுவைக்குச் சுமந்து சென்றார்! ஆச்சரியமான கிருபை!

கிறிஸ்துவின் சிலுவை போன்று இந்த பூமியில் பலம் நிறைந்தது வேறெதுவும் இல்லை. கலாச்சாரமானது சிலுவையில்லாத கிறிஸ்துவை அளிக்க முயற்சி செய்கிறது. மனிதத்துவமானது கிறிஸ்து இல்லாத சிலுவை ஒன்றை அளிக்கிறது. இவற்றில் முன்னது தியாகமற்ற மதமாக உள்ளது; பின்னது மதமற்ற தியாகமாக உள்ளது. இவ்விரண்டுமே தோல்வியடைகின்றன!

*சிலுவையானது நமது ஆழமான உணர்வுளை ஈர்க்கிறது.* சிலுவையில் இயேசு மரித்த நிகழ்வு நமது கடுங்கோபத்தைக் கிளறுகிறது; அது நமது பாராட்டையும் பற்றியெரியச் செய்கிறது. அதன் அர்த்தம் நமது இருதயத்தைப் பிளக்கிறது. இயேசு, “நான் பூமியிலிருந்து

*உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்று கூறினார் (யோவான் 12:32). சிலுவையின் ஈர்ப்புசக்தி மக்களைத் தேவனிடம் ஈர்க்கிறது. அதை நீங்கள் எவ்வளவு அதிகம் நெருங்குகிறீர்களோ, அவ்வளவுக்கு அது வல்லமை நிறைந்ததாக உள்ளது. சிலுவையானது நினைத்துப் பார்க்கவும் பரிவுடன் ஏற்றுக்கொள்ளவும் கூடியதாக மாத்திரம் உள்ளது. பரிவு, பரிதாபம், கோபம் மற்றும் சந்தோஷம் ஆகியவை உங்களுக்குள் உண்டாகின்றன! ஒவ்வொரு நாளிலும் புதிய, மாறுபட்ட, மற்றும் மிகமுக்கியமானவை அதில் இருந்து எழுகின்றன.*

*சிலுவையானது நமது மனித கண்ணியத்தை ஈர்க்கிறது. சர்வவல்லமையுள்ளவரான தேவன் பலாத்காரம் செய்திருக்க முடியும்; அதற்குப்பதிலாக, அவர் அழைக்கிறார். தேவன் முரட்டுத்தனமாகச் செயல்படுவதில்லை. இயேசு மக்களைத் தேவனிடத்திற்கு - ஈர்க்கிறார். துரத்துவதில்லை, (யோவான் 6:44-47). சிலுவையானது மக்களைத் தள்ளுவதோ, பயமுறுத்துவதோ அல்லது தவறாகக் கையாளுவதோ இல்லை. இயேசுவின் பூமிக்குரிய வாழ்வு மரணம் ஆகியவற்றைப் பவுல் "தேவபக்தியின் ரகசியம்" என்று அழைத்தார் (1 தீமோத்தேயு 3:16). "மாயாவாதம்" எதுவும் ஒரு நபரை மாற்ற முடியாது. இயேசு மக்களை மாற்றுகிறார். அவரது அன்பு மக்களை மாற்றுகிறது. நாம் நித்தியத்திற்கும் அவருடன் வாழ்வதற்காக, அவர் நமக்காகத் தமது ஜீவனையே கொடுக்கும் அளவுக்கு, நம்மீது அன்புகூர்ந்தார் - ஆனால் நாம் முடிவுசெய்தவதற்கு அவர் நம்மை அனுமதிக்கிறார்.*

*சிலுவையானது ஒழுக்கரீதியான கடமைகளுக்கான நமது கருத்தறிவை ஈர்க்கிறது. தேவனுடைய சிலுவையானது உலகத்தில் இருந்து "கழிக்கப்படுகிற" எல்லாருக்கும் "கூட்டல்" சின்ன மாக விளங்குகிறது. அதன் அடியில் எவரொருவரும் நடுவுநிலையில் நிலைத்திருக்க இயலாது. சூழ்ச்சிக்கார காய்பா, கோழையான பிலாத்து, மற்றும் இருதயமற்ற ஏரோது ஆகிய அனைவரும் வரலாற்றினால் நியாயந்தீர்க்கப்பட்டுள்ளனர். வென்றது யார்? இயேசு கிறிஸ்துவே! அவர் தமது வெற்றியில் பங்கேற்கும்படியும் நம்முடன் பங்கேற்கும்படி மற்றவர்களை அழைக்கும்படியும் நம்மை அழைக்கிறார்! சிலுவைக்கு முடிவே இல்லை. அது மற்றவர்களுக்குத் தரப்பட வேண்டும்; அது ஒன்று மாத்திரமே கொடுப்பதற்குத் தகுதியானதாக உள்ளது. நீண்ட காலத்திற்குப் பார்க்கையில், நாமே செய்யக்கூடிய ஏதொன்றும் அதற்கு எந்தத் தகுதியும் கொண்டிருப்பதில்லை! சிலுவையைத் தவிர மற்ற எதிலாவது பாவிகள் மகிமைப்பட முடியும் என்பது நினைத்துப் பார்க்கவே இயலாததாக உள்ளது.*

*சிலுவையின் வரலாறு என்பது கூறப்பட்டுள்ளவற்றிலேயே மாபெரும் வரலாறு ஆகும். அது மிக உண்மையானதாக, மிக ஆழமானதாக மற்றும் மிகத் தூய்மையான ஈர்ப்பாக உள்ளது!*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*